Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified
Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

### GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to Dec. 14 : 816 Nos.
  - Up to Nov. 14 : 805 Nos.
- **Performance Dec. 14 …**
  - Turnover growth : 7.41%
  - Employment growth : 0.55%
  - 100% Attendance : 11.73%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

### OUR FORMULATIONS

Tiaano (Innovation In Inert Metals) – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (WE DELIVER VALUE CHAIN) – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm
(CBSE Pattern School)




## விடாமுயற்சியே வெற்றியின் ரகசியம்

நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் சூட்சுமமாக நம்மிடமே திரும்புகின்றன. யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர். முடியுமானால் இன்னொரு நல்ல நம்பிக்கையை அவனுக்குள் செலுத்துங்கள். மனிதன் தன் வாழ்க்கையை தானே உருவாக்கிக்கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக்கொள்ளும் விதிகளைத்தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்படத் தேவையில்லை. தைரியமாக இருங்கள், நல்ல செயல்களுக்கும், இதயப்பூர்வமான நன்மைகளுக்கும் இறைவனே முன்நின்று உதவுவார்.

தொடங்கப்பட்ட முயற்சியில் தடை உண்டானால் மனவலிமையை மேலும் அதிகப்படுத்தி பாடுபடுங்கள். விடாமுயற்சியுடன் செயலை நிறைவேற்றி மகிழ்வதே உயர்வாழ்விற்கான அறிகுறியாகும். “பெறுகின்ற வெற்றியில் தன்னிலை மறக்காமல், இழப்புகள் நேர்கையில் நம்பிக்கை இழக்காமல் சமநிலையில் வாழ்கிற மனநிலையில் தான் மனிதனின் வெற்றி இருக்கின்றது”.

கடினஉழைப்பு, விடாமுயற்சி, படைப்புத்திறன், சிந்தனையாற்றல், அறிவுத்திறன் இவைதான் உங்களை உயர்ந்த மனிதர்களாக்கும்! இந்த நம்பிக்கைத்தான் உங்களின் செயல், என்னால் முடியும், நம்மால் முடியும் என்ற நல்ல எண்ணத்தோடு விடாமுயற்சியோடு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுவோம். ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல முழுமையான வளர்ச்சியை அடையவேண்டும் என்ற நம்பிக்கையோடு உங்கள் அனைவருக்கும், “புத்தாண்டு வாழ்த்துக்களையும், இனிய பொங்கல் நல் வாழ்த்துக்களையும்” தெரிவித்துக்கொள்கின்றேன்! நாம் அடியெடுத்து வைத்திருக்கின்ற 2015 –ம் ஆண்டில் நாமும் விடாமுயற்சி உடையவர்களாக எண்ணிய யாவையும் பெற்று வெற்றி மலர்ந்திட அன்பும், வளமும், நல்ல ஒளிமயமான ஆண்டாக அமைய உங்கள் அனைவரையும் **Tiaano** குடும்பத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

## Wishing you a Prosperous New Year and Happy Pongal

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## பொறுப்பு

நம்மை நாமே உயர்த்திக்கொள்ள வேண்டும். வேறு யாரோ வந்து நம்மை உயர்த்திவிட போவது இல்லை.

நமது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் பொறுப்பை ஏற்கவேண்டும்.

சுய ஒழுக்கம் – கட்டுப்பாடுடன் எடுத்த முடிவை செயல்படுத்துவது அவசியம்.

அவ்வித பொறுப்புதான் நமது வெற்றியை நிர்ணயிக்கக் கூடியது.

Compiled By : Mrs. A. Nirmala
Finance

## FUNCTIONAL WISHES



**Maha Shivaratri**
**17th FEBRUARY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic<br>Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. C. Sounder Suresh** — **02nd Feb.**
Purchase

**Mr. V. Babu** — **05th Feb.**
Fibtec

**Miss. P. Nirmala Devi** — **25th Feb.**
Finance

**Best Wishes from Tiaano Employees**

## அறிஞர் மொழிகள்

- ☹ அதிகமாக உழைப்பவரும், மற்றவருக்கு உதவி செய்பவரும் உயர்ந்தவரே – காமராஜர்.
- ☹ வாழ்க்கையின் குறிக்கோள், குறிக் – கோளுடன் வாழ்வது – ராபர்ட் பைரன்.
- ☹ சோம்பல் உன்னை ஏமாற்றாமல் காத்துக்கொள். ஏனெனில் அதற்கு இன்று ஒரு நாளைக் கொடுத்தால், அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும் – குரோகுவில்.
- ☹ உயிரே போகும் நிலை வந்தாலும் தைரியத்தை கைவிடாதே. துணிந்து நின்றால் எதையும் வெல்ல முடியும் – விவேகானந்தர்.

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஐந்தாம் சார்லஸ் அரசரிடம் ஒரு பணியாள் நீண்ட காலமாக இருந்தான். அவன் மரணப்படுக்கையில் இருப்பதாக் கேள்விப்பட்டு சார்லஸ் அரசர் அவனைப் பார்க்க போனார்.

மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த அவனிடம் ”உன் கடைசி ஆசை என்ன?” என்று கேட்டார் அரசர்.

“இன்னொரு நாள் வாழ விரும்புகிறேன்” என்றான். “இந்த ஆசையைக் கடவுள்தான் நிறைவேற்ற முடியும்” என்றார் அரசர்.

அந்தப் பணியாள் அலுத்துக் கொண்டார். “தவறு செய்து விட்டேனே! இந்த வாழ்க்கையில் உங்களுக்கு ஊழியம் செய்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்”.

எல்லோரையும் விட இறைவன் பெரியவன் என்பதை அரசர் அப்போது புரிந்து கொண்டார்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## இதய அடைப்பு நீங்க அறுவை சிகிச்சையில்லா மருத்துவம் (ஆயுர்வேதம்)

நண்பர்களே கவனியுங்கள்....இது உண்மைச் சம்பவம்... இச்செய்தியை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். தயவு செய்து கவனியுங்கள். உங்கள் ரத்த குழாய் அடைப்பு திறந்து கொள்ளும். ஆஞ்சியோவுக்கோ, பைபாஸ் அறுவை சிகிச்சைக்கோ செல்லுமுன் நம்பிக்கையுடன் இதனைச் செய்யுங்கள். நீங்கள் குணமடைவீர்கள்!

தன் இதய வலிக்காக சிகிச்சைக்குச் சென்ற நோயாளி ஒருவர் பைபாஸ் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டார். இந்நிலையில் நோயாளி ஆயுர்வேத டாக்டர் சையது சாகிப்பை சந்தித்தார். தன்னுடைய ஆஞ்சியோ சோதனையில் இருதய இரத்த குழாயில் மூன்று அடைப்புகள் இருப்பதாகவும் பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு நாள் குறிப்பிட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கு அடியிற்கண்ட பானத்தை அருந்தும்படி ஆயுர்வேத டாக்டர் நோயாளிக்கு பரிந்துரைத்தார். மும்பையில் உள்ள இருதய மருத்துவமனையில் பைபாஸ் அறுவை ஆப்ரேசனுக்கு முதல்நாள் ரூ2,25,000த்தை டெபாசிட் செய்தார். நோயாளியை பரிசோதனை செய்த டாக்டர் அவருடைய முந்தைய பரிசோதனையை சரிபார்த்து வியந்தார். ஆச்சரியப்பட்டார். தன்னுடைய முந்தைய பரிசோதனைக்குப் பிறகு ஏதாவது மருந்து சாப்பிட்டீர்களா? என்று டாக்டர் வினவினார். இதனை கவனமுடன் படியுங்கள். நீங்களும் குணமடையலாம். இருதய இரத்தக் குழாய் அடைப்புகளை திறக்க அருந்தும் பானத்திற்கு உரிய மூலப்பொருள்கள்.



1 கப் எலுமிச்சை சாறு

1 கப் இஞ்சிச் சாறு

1 கப் பூண்டு சாறு

1 கப் ஆப்பிள் சைடர் விநிகர்.

எல்லாச் சாறுகளையும் ஒன்றாக கலக்குங்கள். இலேசான இளஞ்சூட்டில் (சிம்மரில்) 60 நிமிடம் கொதிக்க வையுங்கள். நான்கு கப் மூன்றாக குறையும். சூடு ஆறியவுடன் சாறு இருக்கும் அளவுக்கு சம அளவு இயற்கைத் தேனை கலந்து ஜாரில் வைத்துக் கொள்ளுங்கள். நாள்தோறும் காலை உணவுக்கு முன் ஒரு டீ ஸ்புன் பானத்தை

## தெரிந்து கொள்வோம்

### COLD WATER VS WARM WATER

| COLD WATER | WARM WATER |
|---|---|
| Body has to expand energy to warm up water in order to use it. | Soothes blood vessels, allows better hydration. |
| Helps to cool down the body after workout/ exercise. | Helps move the fats along, reducing risks of clogged arteries, and allows better digestion. |
| Constricts blood vessels, this reduces hydration and absorption ability. | Helps to flush the kidneys and improve bowel movements. |
| Solidify fats from food, causing body to work harder to digest. | When having fever, warm water reduces the body's effort to fight the virus. |

### உடலின் உஷ்ணம் குறைய

* துளசி விதைகளை நீரில் ஊறச் செய்து குடிப்பது, உடல் சூட்டைத் தணிக்கும்.
* குளிர்ந்த பாலில் தேன் கலந்து காலை வெறும் வயிற்றில் அருந்த சூடு தணியும்.
* தினம் ஒரு நெல்லி சாற்றினை அருந்தலாம்.
* 92 சதவீதம் நீரும், வைட்டமின் 'சி' சத்தும் கொண்ட தர்பூசணி பழம் உடல் சூட்டினை நன்கு தணிக்கும்.
* வெந்தயம் ஊற வைத்து தினம் ஒரு டீஸ்பூன் எடுத்துக் கொள்ளலாம்.

Collected from Internet

### TEACHER

**T** is for talented that you surely are
**E** is for explaining so patiently
**A** is for the ability to make the class fun
**C** is for correcting the children when they are wrong
**H** is for helping the children in every way
**E** is encouraging the children to do their best
**R** is for rare; there is only one for you!!

Compiled By : Ms. Geetha Raghuraman
Tiaano Vidyashrm

அருந்துங்கள். மகிழ்ச்சியுடன் பானத்தை அருந்துங்கள்...சுவையாகவும் இருக்கும். நீங்களே உங்களை பைபாஸ் அறுவை சிகிச்சையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

Compiled By : Mr. Velappan Jeyakummar
Managing Director

### சந்தேகம்

ஒரு நாள் இரண்டு தேவதைகளுக்கு சந்தேகம் வந்தது. இறைவனிடம் பலர் வந்து வேண்டிக் கொள்கின்றனர். அப்படி வேண்டிக்கொள்ளும் போது, 'இறைவா.. நான் தினமும் உன்னை வணங்குகிறேன்' என்று சொல்கின்றனர்...இதில் உண்மையான பக்தி உடையவன் யார் என்பது தான் அந்த சந்தேகம்' நேராக இறைவனிடம் சென்று தங்கள் சந்தேகத்தை கேட்டன. அப்போது இறைவன், 'தேவதைகளே! இந்த ஊரில் பலரையும் போய் சந்தித்து யார் எனது உண்மையான பக்தன் என்பதை விசாரித்து வாருங்கள்' என்றார்.

உடனே தேவதைகள் புறப்பட்டு பலரிடமும் சென்று விசாரித்தன. ஒருவன், 'நான் கோவிலுக்குப் போகாத நாளே இல்லை... தினமும் மூன்று வேளை கடவுளை வணங்குகிறேன்', என்றான். அடுத்தவன், நான் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் கோவில் போவேன்,' என்றான். மற்றவன், 'நான் வாரத்தில் ஒரு நாள் நிச்சயம் கோவிலுக்குச் செல்லுவேன்,' என்றான். இன்னொருவன், 'எனக்கு கஷ்டம் வரும் சமயத்தில் கடவுளிடம் முறையிடுவேன், 'என்றான். இப்படியாக பலரும் ஏதோ ஒரு சமயத்தில் கடவுளை நினைப்பவராகவே இருக்க, 'இதில் யார் உண்மையான பக்தன்' எனக் கண்டு பிடிப்பது எப்படி என்ற குழப்பம் தேவதைக்கு ஏற்பட்டது. அப்போது அந்த வழியே அவசரமாகச் சென்று கொண்டிருந்த ஒருவனை நிறுத்தி, 'அப்பனே! உனக்குக் கடவுள் பக்தி உண்டா? நீ எப்போது கடவுளை வழிபடுவாய்?" என்று ஒரு தேவதை கேட்டது. அதற்கு அவன், 'எனக்கு கடவுளை நினைக்கவே நேரமில்லை... அவசரமாக சிலருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது. நான் போகிறேன்...' என்று பதில் கூறிவிட்டு ஏழைகளுக்கு உதவிட அவன் விரைந்தான்.

தேவதைகள் கடவுளிடம் திரும்பி வந்து நடந்ததை அப்படியே விவரித்தன. எல்லாவற்றையும் கேட்ட கடவுள் மவுனம் சாதித்தார். 'தேவனே... உண்மையான பக்தன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?' என்று கேட்டன. 'கண்டுபிடித்துவிட்டேன்!' என்றார் கடவுள். தினமும் மூன்று வேளை கோவிலுக்கு வருபவர்தானே?' என்று கேட்டன தேவதைகள். கடவுள் புன்னகைத்தபடியே, 'இல்லை... இல்லை... கடைசியாக என்னை நினைக்க கூட நேரமில்லாது ஏழைகளுக்கு சேவை செய்ய ஓடினானே... உண்மையில் அவன்தான் எனது உண்மைப் பக்தன், 'என்றார். அப்போது தான் புரிந்தது தேவதைகளுக்கு.

Compiled By : Miss. T. Regi
Facilitation

### நம்பித்தான் ஆகவேண்டும்

**5S** (தொடர்ச்சி XXXVII)

#### அஞ்சறைப் பெட்டி

இதே போல், நம் வீட்டிலும் வெவ்வேறு அறைகளில் பயன்படுகிற பொருள்கள் நிறைய! இவற்றை எல்லாம் எங்கே வைக்கவேண்டும்,

## கவிதைகள்

### வாழ்க்கை

வாழ்க்கை என்பது...
ஒரு சந்தர்ப்பம் நழுவ விடாதிருங்கள்...
ஒரு கடமை நிறைவேற்றுங்கள்...
ஒரு இலட்சியம் சாதியுங்கள்...
ஒரு சோகம் தாங்கிக் கொள்ளுங்கள்...
ஒரு போராட்டம் வென்று காட்டுங்கள்...
ஒரு பயணம் நடத்தி முடியுங்கள்....

### இதயம்

இதயம் இமயத்தை விட உயரமானது!
இந்து மகா சமுத்திரத்தைவிட
ஆழமானது...
உலக அதியங்களை விட அற்புதமானது!
பாசம்
சில வேளைகளில் வேஷங்களாய்
பரிணமிக்கும் போதும்
மோசமென முட்டித் தள்ளிவிடாமல்
கருணை கலந்து மீண்டும்
இதயம் நேசக்கரம் நீட்டும்!
ஏங்கியழும் குழந்தையை
எங்கேனும் கண்டால்
ஏனென்று அழும் காரணத்தை
இதயம் கேட்கும்!
சொந்த பந்தங்களால் பந்தாடப்படும் போது
இதயம் துவண்டு விடுவதில்லை
எதிர்நீச்சலடித்து
என்றும் தன் இருப்பை
தக்க வைத்துக் கொள்கிறது!

Compiled By : Miss. P. Nirmala Devi
Finance

## சிந்தனைக்கு

லட்சியத்தில் ஆழ்ந்து ஈடுபட வேண்டும் – ஒரு கணம் ஈடுபடுவதில்லை. ஒரு கணம் ஈடுபடுவதல்ல. அமைதியாகவும் குலையாத முயற்சியோடும் நிலையாகவும் ஈடுபட வேண்டும். சாதகப் பறவை இடி மின்னல்களுக்கு இடையிலும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும். அது மழை நீரைத் தவிர வேறு நீரைக் குடிக்காது. அத்தகைய ஈடுபாடே தேவையானது.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

எப்படி வைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு ‘செய்டன்’ பயன்படுகிறது.

‘செய்டன்’ என்ற ஜப்பானிய வார்த்தைக்கு இணையாகச் சொல்லப்படும் ஆங்கில ‘S’ வார்த்தைகளில் சில ஹ Straighten, Set in Order, Sort, Standardisation முதலியன. இவற்றுள் ‘Sort’ என்ற வார்த்தை, ‘செய்ரி’க்கும் பயன்படுத்தப்படுகிறது.

‘செய்ரி’யின் நோக்கம், பணியிடத்தில் குப்பை சேர்வதைக் குறைப்பது. அப்படி குப்பையை குறைத்த பிறகு, மிச்சமிருக்கும் இடத்தில், நமக்குத் தேவையான பொருள்கள் எப்படி ஒழுங்கமைப்பது என்பதுதான் நாம் கவனிக்கவிருக்கும் அடுத்தக் கேள்வி.

உதாரணமாக, நான் ஒரு இயந்திரத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறேன். எதற்காகவோ எனக்கு ஒரு ஸ்பேனர் தேவைப்படுகிறது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்.

1. ஸ்பேனர்கள் எல்லாம் ஒரே இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா? அது எந்த இடம் என்று எனக்கு தெரியுமா?
2. இப்போது நான் நிற்கிற இடத்திலிருந்து, அந்த ஸ்பேனர் பெட்டி எவ்வளவு தூரம்?
3. அங்கே செல்வதற்கு எவ்வளவு நேரமாகும்?
4. அந்தப் பெட்டியினுள் யாரும் உடகார்ந்துகொண்டு, எனக்கு வேண்டிய ஸ்பேனரைத் தயாராக எடுத்து நீட்ட போவதில்லை. அதை தேடுவதற்கு எனக்கு எவ்வளவு நேரமாகும்?
5. திரும்பி வருவதற்கு எவ்வளவு நேரமாகும்?
6. இந்த நேரங்களை மிச்சப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்?

இந்த அடிப்படைக் கேள்விகள் தான், ‘செய்டன்’ மாணவர்களின் முதலாவது பாடம். நமக்குத் தேவையான பொருள்கள், எந்த அளவுக்குச் சுலபமாகக் கிடைக்கின்றன? அதை மேலும் சுலபமாக்குவது எப்படி?

ஸ்பேனர்களைப் போலவே, சுவாரஸ்யமான இன்னோர் உதாரணம் – சமையலறையில் ரசம் கொதித்துக்கொண்டிருக்கும்போது, உப்பு டப்பாவைத் தேடுகிறோம். சட்டென்று கைக்குக் கிடைக்கிறதா?

தொடரும்...

## ELECTROLYZER

